# தமிழ்நாடு சட்டப் பேரவை

## திருவள்ளுவர் ஆண்டு 2041 – சித்திரை 17

## 2010 ஏப்ரல் 30, வெள்ளிக்கிழமை

*சென்னை, ஓமந்தூரார் அரசினர் தோட்டம், புதிய சட்டப் பேரவை–தலைமைச் செயலக வளாகத்தில் உள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர்* **திரு. இரா. ஆவுடையப்பன்** *அவர்கள் தலைமையில் காலை 9–30 மணியளவில் பேரவை கூடியது.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

*"நாடோறு நாடுக மன்னன் வினைசெய்வான்*
*கோடாமை கோடா துலகு."*

*உழைப்போர் உள்ளம் வாடாமல் இருக்கும் வரையில் உலகின் செழிப்பும் வாடாமல் இருக்கும். எனவே, உழைப்போர் நிலையை ஒவ்வொரு நாளும் அரசினர் ஆய்ந்தறிந்து ஆவன செய்ய வேண்டும்.*

### 1. வினாக்கள்—விடைகள்

### உடுக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா வரிசை எண் 121, மாண்புமிகு உறுப்பினர் திரு. த.அ. மேகநாதன், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

**121—**

### வேளாண்மை தொழிற்பயிற்சி நிலையம்

***61716—திரு. த.அ. மேகநாதன்:**

*மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*காவேரிப்பட்டினம் தொகுதி, காவேரிப்பட்டினம் ஒன்றியம், திம்மாபுரம், பையூர் ஆகிய இடங்களில் வேளாண்மை தொழிற்பயிற்சி நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

[2010 ஏப்ரல் 30

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

வேளாண்மை தொழிற்பயிற்சி நிலையம் அமைக்கத் திட்டம் ஏதுமில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. த.அ. மேகநாதன்.

**திரு. த.அ. மேகநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிருஷ்ணகிரி மாவட்டம், எனது காவேரிப்பட்டினம் தொகுதி, வேளாண்மைத் தொழில் நிறைந்த பகுதியாகும். எனது தொகுதி, கிருஷ்ணகிரி அணை ஆயக்கட்டின்கீழ் அமைந்துள்ளதால், சுமார் 60 சதவிகித மக்கள் வேளாண்மையை நம்பி வாழ்கின்றனர். எனது தொகுதிக்குட்பட்ட திம்மாபுரம் கிராமத்தில் சுமார் 20 ஏக்கரில் ஒரு பழப் பண்ணையும், பையூரில் சுமார் 100 ஏக்கரில் வேளாண்மை மண்டல ஆராய்ச்சி நிலையமும் இயங்கி வருகின்றன. புதிய நெல் வகைகளும் கண்டுபிடிக்கப்பட்டு வருகின்றன. இந்தச் சூழ்நிலையில், கடந்த ஆண்டு விவசாயிகள் முதல் போகம் நெல் பயிரிடும் நாற்று விட்டபோது, அந்த விதைகள் வழங்கிய வேளாண் அரசு அலுவலர்கள் தரமற்ற நெல் விதைகளைக் கொடுத்ததால், நெல் நாற்று முளைக்காமல் முதல் போகம் முழுவதும் பயிரிட முடியாமல் போய்விட்டது. இதனால் சுமார் 200 ஏக்கர் நிலம் பயிரிடாமல் இருந்தது. இதன்மூலம் விவசாயிகளுக்குப் பல இலட்சம் ரூபாய் நஷ்டம் ஏற்பட்டது. இதற்கு முக்கியக் காரணம், பயிற்சி இல்லாத வேளாண் அலுவலர்கள் தரமற்ற நெல் விதைகளை வழங்கியது. அதனால், துறை அலுவலர்கள் மற்றும் உற்பத்தியாளர்கள், விவசாயிகளுக்குத் தரமான விதை உற்பத்தி, விதை மாதிரி எடுத்தல், விதைப் பரிசோதனை, விதை ஆய்வு குறித்த பயிற்சி, புத்தாக்கப் பயிற்சி, விதை உற்பத்தி தொழிற்பயிற்சி, தரக் கட்டுப்பாடு பயிற்சி போன்ற பயிற்சிகளையும், அதேபோல மண் பரிசோதனைப் பயிற்சி, வேளாண் விரிவாக்கப் பயிற்சி ஆகியவற்றையும் அவசியம் கொடுக்க வேண்டியுள்ளது. மேற்கண்ட காரணங்களால் வேளாண் தொழில்நுட்பப் பயிற்சி பெறும் வகையில் எனது தொகுதிக்குட்பட்ட பையூர் அல்லது திம்மாபுரம் கிராமத்தில் வேளாண் தொழிற்பயிற்சி நிலையம் ஒன்று துவக்க அரசு முன்வருமா என தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

2010 ஏப்ரல் 30]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் மூலக் கேள்வியில் வேளாண்மை தொழிற்பயிற்சி நிலையம் அமைக்கப்படுமா என்றுதான் கேட்டிருந்தார்கள். அதற்குத்தான் நான் இல்லை என்று இங்கே பதிலளித்தேன். காவேரிப்பட்டினம் சட்டமன்றத் தொகுதி உள்ளடக்கிய கிருஷ்ணகிரி மாவட்டத்தில், கிருஷ்ணகிரியில் உழவர் பயிற்சி நிலையமும், பையூரில் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக மண்டல ஆராய்ச்சி நிலையம் மற்றும் பயிர் மருத்துவ மையமும் ஏற்கெனவே செயல்பட்டு, அம்மாவட்ட விவசாயிகளுக்குத் தேவையான அனைத்து தொழில்நுட்பப் பயிற்சிகளும் அளிக்கப்பட்டு வருவதால், காவேரிப்பட்டினம் ஒன்றியம், திம்மாபுரம் மற்றும் பையூர் ஆகிய இடங்களில் புதிதாக வேளாண்மைப் பயிற்சி நிலையம் அமைக்க வேண்டிய நிலை எழவில்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சென்ற ஆண்டு விதை நெல் வழங்கியதில், அதிலே முளைப்புத் திறன் இல்லாத காரணத்தினாலே விவசாயிகள் பாதிக்கப்பட்டதாக இங்கே எடுத்துச் சொன்னார்கள். அதுபோன்ற புகார் அரசுக்கு வரவில்லை. மேலும், டெப்போக்களிலே வழங்கக்கூடிய விதை நெல்கள் germination விதை முளைப்புத் திறனை ஆராய்ந்து பார்த்து, சரியாக இருக்கிறது என்று தெரிந்தால்தான், விவசாயிகளுக்கு வழங்க வேண்டுமென்று ஆலோசனை வழங்கப்பட்டு, அந்த அடிப்படையிலே தமிழ்நாடு முழுவதும் முளைப்புத் திறனைப் பார்த்து, நாம் விதை நெல்களை வழங்குகிறோம். கடந்த நான்கு ஆண்டு காலமாக, எந்தப் பகுதியிலும் இதுபோன்ற ஒரு புகார் எழவில்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எழுப்புவதுதான் எனக்கு ஆச்சரியமாக இருக்கிறது.

முற்பகல் 9–35

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. த.அ. மேகநாதன்.

**திரு. த.அ. மேகநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிருஷ்ணகிரி மாவட்டத்தில் வேளாண் பயிற்சி நிலையம் உள்ளதா? அது எங்கெங்கு செயல்படுகிறது? எத்தனை

நிலையங்கள் உள்ளன? அதில் விவசாயிகளுக்கு இலவசமாகப் பயிற்சி கொடுக்கப்படுகிறதா என்பதை அமைச்சர் அவர்கள். . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மேகநாதன், நீங்கள் மூலக் கேள்விக்கு related–ஆகக் கேளுங்கள். எதற்கு உங்களுக்கு statistics எல்லாம் இப்போது? விஷயத்தை மட்டும் சொல்லுங்கள். தாருங்கள் என்று அமைச்சரைக் கேட்டு, உட்காருங்கள்.

**திரு. த.அ. மேகநாதன்:** விவசாயிகளுக்கு இலவசமாகப் பயிற்சி அளிக்கப்படுகிறதா என்பதை அமைச்சர்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயிகளுக்குப் பல்வேறு பயிற்சிகள் வழங்கப்படுகின்றன. குறிப்பாக காளான் வளர்ப்பு, மண் புழு உரம் தயாரித்தல், மலர் சாகுபடி, நுண்ணுயிர் உற்பத்தி, ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து மேலாண்மை, ஒருங்கிணைந்த பயிர்ப் பாதுகாப்பு மேலாண்மை, காய்கறி விதை உற்பத்தி, அலங்காரத் தோட்டம் அமைத்தல், மூலிகைப் பயிர் சாகுபடி, பட்டு வளர்ப்பு, அங்கக வேளாண்மை, பழங்கள், காய்கறிகளைப் பதப்படுத்துதல், வீரிய ஒட்டு விதை உற்பத்தி, நவீன பாசன முறை அறுவடைக்குப் பின் நேர்த்தி, தென்னை சாகுபடி, பண்ணைக் கருவிகள் மற்றும் இயந்திரங்களைப் பழுதுபார்த்தல், தரிசு நில மேம்பாடு, தொழில்நுட்பம், பருத்தி சாகுபடி, களை நிர்வாகம், தேனீ வளர்ப்பு ஆகிய 21 வகையான பயிற்சிகள் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு வருகின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. இராம்பிரபு.

**திரு. இரா. இராம்பிரபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாய்ப்புக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். என்னுடைய இராமநாதபுரம் மாவட்டத்திலே விவசாயிகளிடமிருந்து வேளாண்மைத் துறை கொள்முதல் செய்யக்கூடிய விளை பொருட்களையெல்லாம்—அவர்கள் அந்தப் பொருட்களையெல்லாம் (குறுக்கீடு) வேளாண்மைத் துறைக்குச்

2010 ஏப்ரல் 30]

சம்பந்தமான கேள்வி என்பதால், தாங்கள் இதற்கு தயவுசெய்து அனுமதியளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அந்தப் பொருட்களையெல்லாம் store பண்ணுவதற்கு ஒரு cold storage கிடையாது. தனியார்கள் நபார்டினுடைய உதவியுடன் அந்த cold storage–ஐ அமைத்தால், அரசு கொள்முதல் செய்யக்கூடிய அந்த விளைபொருட்களை cold storage–லே வைப்பதற்கு அரசு இந்தத் துறை அனுமதியளிக்குமா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு Civil Supplies Corporation மூலம், நெல் போன்ற தானியங்களை அரசு கொள்முதல் செய்கிறபோது, அதற்காக godownகள் வைத்திருக்கின்றார்கள். வேளாண்மைத் துறையைப் பொறுத்தவரைக்கும், வேளாண்மை விற்பனை மற்றும் வணிக வரித் துறை மூலம் ஒவ்வொரு மாவட்டத்திலும் வேளாண்மை விற்பனைக் கூடங்கள் தேவையான அளவுக்கு இருக்கின்றன. இராமநாதபுரத்திலும் இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் cold storage–ஐ, குளிர்பதனக் கிடங்கு அமைக்கப்படுமா என்று கேட்டார்கள். இப்பொழுது அந்த யோசனை அரசிடம் இல்லை. வேண்டுமானால், தனியார் அப்படி godown அமைக்க முன் வந்தால், மத்திய அரசாங்கத்தினுடைய 25 சதவிகிதம் உதவி பெற்றுத் தரப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா வரிசை எண் 122, மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ. காமராஜ், மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.*

**122—**

**நீதிமன்றம்**

***110108—திரு. பெ. காமராஜ்:**

*மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*